# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 78 /2016**

திரு. அ. வெள்ளைச்சாமி,
த/பெ அய்யனார்,
க.எண்.3/9T1,
முத்தமிழ் அபார்ட்மெண்ட்,
மகாராஜா நகர்,
திருநெல்வேலி . . . . மேல் முறையீட்டாளர்
(திரு. செந்தில் விஸ்வரூபன், வழக்கறிஞர்)

எதிர்

1) செயற் பொறியாளர் /பகிர்மானம்,
சங்கரன்கோயில்,
திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சங்கரன்கோயில்–627 756.

2) உதவி பொறியாளர்/பகிர்மானம்,
பெருமாள்பட்டி,
திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பெருமாள்பட்டி – 627 753. . . . . . . எதிர்மனுதாரர்கள்
(திரு. முனியசாமி, செயற்பொறியாளர்(பொறுப்பு)/சங்கரன்கோயில்,
திருமதி. தமிழ்செல்வி, உதவி பொறியாளர்/பெருமாள்பட்டி)

**கேட்புரை நாள்– 20.12.2016**

**ஆணை நாள் – 4.4.2017**

திரு. அ. வெள்ளைச்சாமி, மகராஜநகர், திருநெல்வேலி அவர்களின் 25.9.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.78/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.12.2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின்

மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

அவரது நியாயமான கோரிக்கையை ஏற்று IIIA(1) விகிதப்படி விவசாய மின் இணைப்பினை விகிதப்படி IV ஆக மாற்றம் செய்ய உத்தரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் எட்டுச்சேரி கிராமத்திலுள்ள அவரது விவசாய நிலத்திற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பத்தை பதிவு செய்துள்ளார். விண்ணப்ப பதிவு எண்.113/2012–2013 ஆகும்.

2.2 மேற்கண்ட விண்ணப்பத்திற்கு சுயநிதி திட்டத்தின் கீழ் ரூ.500/– 28.3.2013ல் செலுத்தி ரூ.50,000/– திட்டத்தில் தன்னுடைய விவசாய விண்ணப்பத்தை பதிவு செய்துள்ளார்.

2.3 மேற்கண்ட விவசாய நிலத்திற்கு IIIA(1) என்ற பட்டியல் விகிதப்படி மின் இணைப்பை 27.12.13 அன்று பெற்றுள்ளார். மின் இணைப்பு எண்.07–046–007–497 ஆகும்.

2.4 அவருடைய சுயநிதி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் இந்தாண்டு குறியீட்டில் அறிவிப்பு வழங்க இருப்பதாக தெரிந்ததால், தனக்கு மின் இணைப்பு வழங்கி IIIA(1) என்ற விகிதபட்டியலில் உள்ள மின் இணைப்பை விவசாய மின் இணைப்பாக IV என்ற விகிதப்பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று மனு செய்துள்ளார்.

2.5 உதவி பொறியாளர்/விநியோகம், பெருமாள் பட்டி அவர்கள் அவர் ஏற்கனவே IIIA(1) என்ற விகிதபட்டியலில் மின் இணைப்பு பெற்றுவிட்டதால் சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு வழங்க முடியாது என்றும் சாதரண வரிசை (Normal) முன்னுரிமைப்படி தான் வழங்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

2.6 மேல்முறையீட்டாளர், திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு செய்துள்ளார். மன்றம் தன்னுடைய தீர்வை 11.8.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. மேற்கண்ட ஆணையில் அதிருப்தியுற்ற மேல் முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவினை மின் குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்பித்துள்ளார்.

3. **மன்றத்தின் ஆணை:**

திருநெல்வேலி மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 11.8.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் குறிப்பிட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ **மன்றத்தின் தீர்வு:***

*மனுதாரரின் கோரிக்கையின் படி தாழ்வழுத்த மின் வீதப்பட்டி IIIA(1) பிரிவில் விவசாயத்திற்கான வீதப்பட்டி IVன் வகைப்பாட்டில் உள்ள விதியில் கீழ்கண்டவாறு உள்ளது.*

*“வேளாண்மை மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளின்” நோக்கத்திற்காக நீர் இறைத்தல் நீர் வழங்கல் ஆகியவற்றிற்கும் பொருந்தக் கூடியதாகும் ஆனால் விண்ணப்பதாரர் தாழ்வழுத்த மின்கட்டணம் IV–ன் கீழ் வேளாண்மைக்கு நீர் வழங்கலுக்கு வகை செய்யும் நோக்கத்திற்காக குறிப்பாக பேணப்பட்டு வரும் முதுநிலைப் பட்டியலின்படி தாழ்வழுத்த மின்கட்டணம் IV–ன் கீழ் மின்வழங்கல் பெற முடியாமலிருக்க வேண்டும் அத்தகைய தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA(1) உடைய மின் நுகர்வோர் தாழ்வழுத்த மின் கட்டணம் IV க்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர். உரிமதாரரால் இந்த*

நோக்கத்திற்காக பேணப்பட்டுவரும் குறித்த வகை முதுநிலைப்பட்டியலின்படி தாழ்வழுத்த மின் கட்டணம் IV ன் கீழ் முறையான மின் வழங்கலைப் பெறுவதற்கு அத்தகைய விண்ணப்பதாரர் தகுதியுடையவராகிற போதெல்லாம் இந்த உட்கூறில் குறிப்பிடப்பட்ட குறித்த வகை நோக்கத்திற்காகப் பெறப்பட்ட மின் வழங்கலின் தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA(1) ஐ தாழ்வழுத்த மின்கட்டணம் IV ஆக மாற்றப்படும். அதன் பின்பு தாழ்வழுத்த மின்கட்டணம் IV க்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள் மட்டுமே பொருந்தும்'' என உள்ளது.

மேற்கண்ட விதிகளின் படி விவசாய மின் இணைப்பு IIIA(1) திட்டத்தின் கீழ் பெறப்படும் மின் இணைப்புகள் வீதப்பட்டி IV ன் கீழ் வேளாண்மைக்கு நீர் வழங்கலுக்கு வகை செய்யும் நோக்கத்திற்காக குறிப்பாக பேணப்பட்டு வரும் முதுநிலைப் பதிவை அடையும் போது அவரது IIIA(1) கீழான விவசாயம் சார்ந்த மின் இணைப்பு வீதப்பட்டி IV கீழ் மாற்றம் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் இது குறித்து

1. தலைமை அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட SE/RE&I(D)/EE/ RE/ A1/F.Doc/D.729/14 dt.01.10.2014 சுற்றறிக்கையில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

   CE/D/Coimbatore has sought clarification for effecting service connection under LT Tariff III-A(1) for the purpose of agriculture and allied activities for which it has been clarified as follows :

   "In as much as RSFS Scheme has not been discussed in tariff order the existing procedure, in the tariff order under IIIA(1) shall have to be followed'' என உள்ளது.

2. தலைமை பொறியாளர் கோயம்புதூர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட CE/D/CBE/AEE.GL/F.2/D.698/2015 dt. 28.11.2015 சுற்றறிக்கையில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

   It has been clarified by Headquarters vide letter reference (4) that, "In as much as RSFS scheme has not been discussed in the Tariff order the existing procedure in the Tariff order under LT III A1 shall have to be followed".

*In order to have a uniform procedure throughout this region, all the Superintending Engineers/EDC of this region are requested to issue instructions to all the field officers upto section level to register LT Tariff III-A(1) applications for the Openwells/Borewells with Agricultural Tariff-IV applications already registered under normal priority only and not for the RSFS applications. If the agricultural applicant wants agricultural service connection for the open wells/ Borewells registered under R-SFS category, they have to lose the Rs.500/- paid seniority for the concerned R-SFS category and continue under normal category only.*

*The conversion of SC obtained under IIIA(1) category to Agricultural category shall be done only when his turn comes under Normal priority category.*

*மேலும் ஒரு புல எண்ணில் ஒரு மின் இணைப்பு மட்டுமே ஒரு செயல் நோக்கத்திற்காக வழங்க இயலும். எனவே மேற்கண்ட விதிகளின் படி மனுதாரருக்கு விவசாயம் செய்வதற்காக ஏற்கனவே ஒரு IIIA(1) திட்டத்தின் கீழ் ஒரு மின் இணைப்பு உள்ள நிலையில் மேலும் விவசாயத்திற்கு சுயநிதி திட்ட பதிவின் படி வீதப்பட்டி IV ன் கீழ் ஒரு மின் இணைப்பு வழங்க இயலாது. மேற்கண்ட விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளின் படி ஆராய்கையில் மனுதாரரின் LT Tariff IV ன் கீழான பதிவு மூப்பு வரும் போது மனுதாரருக்கு அவரது மின் இணைப்பு எண். வீதப்பட்டி IV ன் கீழ் மாற்றம் செய்ய இயலும் என மன்றத்தால் தீர்வளிக்கப்படுகிறது. சுயநிதி திட்டம் ரூ.50000/– கீழ் விவசாய மின் இணைப்பு வழங்க இயலாது எனவும் தீர்வு செய்யப்படுகிறது.”*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

**4.1** வாரியத் தரப்பு பதிலுரையில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்படி “இது தொடர்பாக க.எ.ண,த.பொ/திலி/செபொ/மின்/உசெபொ/தொது/முநிவ/கோ.விவசாயம்/அ.எண்.**513/16** நாள் **28.05.16** கடிதம் மூலம் விளக்கங்கள் பெற தலைமைப் பொறியாளர்/திட்டமிடல்

அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதை தங்களது மேலான கவனத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என்று வாரியத்தரப்பு பதிலுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது".

இது சம்பந்தமாக முடிவுகள் எடுக்காமல் விளக்கம் கேட்டிருக்கும் சூழ்நிலையில், விளக்கம் வராத நிலையில் சுயமாக உதவி மின்பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னிச்சையாக IIIA(1) விவசாய மின் இணைப்பினை விகிதப்பட்டி IV விவசாய மின் இணைப்பாக மாற்றித் தர இயலாது என அறிவித்திருப்பது தவறான தீர்ப்பாகும் என்பதை தெளிவுபடுத்துகிறது.

4.2 மேலும் வாரியத் தரப்பினில் தெரிவிக்கும் போது சுயநிதி திட்டம் (ரூ.50000/–) கீழ் ரூ.500/– 28.03.2013 அன்று செலுத்தப்பட்டதன் அடிப்படையில் விவசாய மின் இணைப்பு வழங்க கேட்டுக் கொண்டுள்ளேன். இவ்வாண்டு குறியீட்டில் (2016–17) விவசாய மின் இணைப்பு வழங்க ரூ,500/– பணம் சுயநிதி திட்டம் (ரூ.50000/–) கீழ் பணம் செலுத்தியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெற்று திட்ட மதிப்பீடு தொகை செலுத்த தாக்கீது (Notice) வழங்கத்தக்க வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நடவடிக்கையினை தொடர்ந்து பிரிவு அலுவலர் அளித்த அ.எண்.068/16 நாள் 09.03.2016 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் திரு A.வெள்ளைச்சாமி அவர்கள் ஏற்கனவே IIIA(1) வீதப்பட்டியலில் விவசாய பயன்பாட்டிற்காக மின் இணைப்பு எண்.046–007–494 நாள் 27.12.2013 அன்று அதே புல எண்ணில் வழங்கப்பட்டுள்ளது. திரு A.வெள்ளைச்சாமி, த/பெ.அய்யனார் விண்ணப்பதாரர் என பெறப்பட்டிருந்தால் சாதாரண வரிசையில் விண்ணப்பதாரரது பதிவு முன்னுரிமை வரும் போது மட்டுமே மின் இணைப்பு வழங்க இயலும். எனவே, மின் இணைப்பு வழங்க நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்ற வாரிய தரப்பு பதிலுரையில் ஒரே புல எண்ணில் இரண்டு விவசாய மின் இணைப்பு கேட்பது போன்று கற்பனையாக உருவாக்கிக் கொண்டு விவசாய

மின் இணைப்பு தர இயலாது என தெரிவிக்கின்றனர். ஆனால் உண்மையில் ஒரு புல எண்ணில் வழங்கப்பட்ட IIIA(1) விவசாய மின் இணைப்பினை விகிதப்பட்டி IV விவசாய மின் இணைப்பாக வாரிய விகிதப்படி உத்தரவு **11.12.2014** ன் படி மாற்றித்தர ‘‘பெறப்பட்ட விவசாய மின் இணைப்பு விகிதப்படி IIIA(1)ல் இருந்து நிரந்தர விவசாய மின் இணைப்பு விகிதப்படி சுயநிதி திட்டத்தின் கீழ் மாற்றி தரவும் அதற்குரிய விஸ்தரிப்பு மதிப்பீட்டுத் தொகை அணைத்தையும் செலுத்த சம்மதம் தெரிவித்து சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு கேட்டுக் கொண்டேன்.

**4.3** அதற்கு மீண்டும் **24.03.2016** அன்று உதவி பொறியாளர்/விநியோகம்/பெருமாள்பட்டி அவர்கள் அளித்த அறிவிப்பு கடிதத்தில் நான் கேட்டுக் கொண்ட சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு வழங்குவது பற்றி தெரிவிக்காமல் மேற்கண்ட IIIA(1)ல் விவசாய மின் இணைப்பு விகிதப்படி IV ஆக மாற்றம் செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள். ஆனால் மின் வாரிய விகிதப்படி ஆணைப்படி “Tariff Order நாள் **11.12.2014**, பக்கம் **13**, வரிசை எண்.(viii) “such LT Tariff IIIA(1) consumer is eligible to apply for LT Tariff IV as and when such applicant becomes eligible to get regular supply under LT Tariff IV as per seniority maintained for that purpose by the licensee” எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.4** IIIA(1) விகிதப்படியில் விவசாய மின் இணைப்பு வழங்கும்போது RSFS சுயநிதி திட்டமுன்னுரிமை இரத்து ஆகும் என எவ்வித எழுத்து பூர்வமாகவோ, வாய்மொழியகவோ தகவல் விவசாய மின் இணைப்பு வழங்குதல் அதிகாரி அவர்களிடம் இருந்து தெரிவிக்கப்படவில்லை.

4.5 மேலும் சுயநிதித் திட்டத்தின் கீழ் ரூ.500/– செலுத்திய விவசாய முன்னுரிமை இருக்கும் நிலையில் எந்த முகாந்திரமும் இல்லாமல் விவசாய மின் இணைப்பு வழங்க மறுப்பது முறையானதல்ல.

4.6 மன்றத்தின் தீர்ப்புரையில் உள்ளபடி

i. தலைமை அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட SE/RE&I(D)/ EE/ RE/ A1/F.Doc/D.729/14, dt. 01.10.2014 சுற்றறிக்கையில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“CE/D/Coimbatore has sought clarification for effecting service connection under LT Tariff IIIA(1) for the purpose of agriculture and allied activities for which it has been clarified as follows:

“In as much as RSFS scheme has not been discussed in the Tariff Order, the existing procedures in the Tariff Order under IIIA(1) shall have to be followed” என உள்ளது.

ii. தலைமைப் பொறியாளர் கோயம்புத்தூர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட CE/D/CBE/AEE.GL/F.2/D.698/2015 சுற்றறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

It has been clarified by HeadQuarters vide letter reference (4) that, “In as much as RSFS scheme has not been discussed in the Tariff order the existing procedure in the Tariff order under LT IIIA(1) shall have to be followed”.

In order to have a uniform procedure throughout this region, all the Superintending Engineers/EDC of this region are requested to issue

instructions to all the field officers upto section level to register LT Tariff III-A(1) applications for the Open wells/Bore wells with Agricultural Tariff-IV applications already registered under normal priority only and not the R-SFS applications. If the agricultural applicant wants agricultural service connection for the open wells/ Bore wells registered under R-SFS category, they have to lose the Rs.500/- paid seniority for the concerned R-SFS category and continue under normal category only.

The conversion of SC obtained under IIIA(1) category to Agricultural category shall be done only when his turn comes under Normal priority category.

இதில் RSFS சுயநிதித் திட்டம் விகிதப்படி என ஆணையில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என **01.10.2014** நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

மேலும், இந்த subject க்கும் சம்பந்தமில்லாத ஒரு சுற்றறிக்கையினை ஆதாரமாக எடுத்துக் கொண்டு "The conversion of SC obtained under IIIA(1) category to Agricultural category shall be done only when his turn comes under Normal Priority category".

**4.7** ஆனால் வாரிய விதிகள் **11.12.2014**ன் படி எந்த இடத்திலும் ''விவசாய மின் இணைப்பு உட்பிரிவுகளின் அடிப்படையில் மாற்றம் செய்யலாம் என குறிப்பிடப்படவில்லை''.

**4.8** ஏனெனில் விவசாய விகிதப்படி என்பது விகிதப்படி IV ஆகும். இதில் உட்பிரிவுகள் ஆகியவை உள்ளடக்கியதாகும். அதனால் விகிதப்படி ஆணையில் தனித்தனியே எந்த இடத்திலும் விவரிக்கப்படவில்லை.

**4.9** மேலும் **11.12.2014** அன்று வழங்கப்பட்ட விகிதப்படி ஆணையினை புறந்தள்ளிவிட்டு, **01.10.2014** அன்று வழங்கிய சுற்றறிக்கையினை மையப்படுத்தி தன்னிச்சையாக தீர்ப்புரை வழங்கியுள்ளது எந்த விதத்திலும் ஏற்புடையதல்ல.

5. **<u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>**

5.1 சங்கரன்கோவில் ஊராக உபகோட்டத்திற்குட்பட்ட பெருமாள்பட்டி விநியோகப் பிரிவிற்குட்பட்ட எட்டிச்சேரி கிராமத்தில் பருவக்குடி Rev. Village புல எண்.65/1B விவசாய நிலத்திற்கு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர்திரு.அ.வெள்ளைச்சாமி, த/பெ. அய்யனார், க.எண்.3/9T1, முத்தமிழ் அபார்ட்மெண்ட், மகாராஜா நகர், திருநெல்வேலி அவர்களால் ரூ.50/—யை **30.01.2013** ல் பதிவு கட்டணம் செலுத்தப்பட்டு (tit046AR2S1175/30.1.13) செயற்பொறியாளர் விநியோகம், சங்கரன்கோவில் அலுவலகத்தில் வரிசை எண்.**113/2012—13** நாள் **31.01.13** ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு மேல்முறையீட்டாளர் திரு.அ.வெள்ளைச்சாமி ரூ.**50000**/—க்கான சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு பெற ரூ.**500**/—ஐ முன் பணமான **28.03.2013** அன்று செலுத்தி (tit046AR2S1153/28.03.2013) துரித வரிசை முன்னுரிமையில் பதிவு செய்துள்ளார்.

5.2 வாரியத் தரப்பு பதிலுரையில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்படி “தேவையின் நிமித்தம் வாரிய உத்தரவின் தெளிவு தொடர்பாக க.எண்.தபொ/திலி/செபொ/மின் /உசெபொ/தொநு/முநிவ / கோ.விவசாயம்/அ.எண்.**513/16**, நாள் **28.05.2016** கடிதம் மூலம் விளக்கங்கள் பெறவேண்டி மேலமை அலுவலகத்திற்கு அனுப்பப்படுவது என்பது அலுவலக நடைமுறைகளில் ஒன்றாகும். இவ்வழக்கிற்கு ஏற்கனவே உள்ள உத்தரவுகளை எடுத்துக் கொண்டு சாத்தியமானால் பதில் அளித்திடவும் இயலும் இப்பதிலுரையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இருந்துவரும் வாரிய உத்தரவுகளின் சாத்திய கூறுகளின் அடிப்படையிலேயே மன்றத்தின் தீர்வான பதிலுறை வழங்கப்பட்டுள்ளது. எனவே மேல்முறையீட்டாளரின் கூற்று ஏற்புடையதல்ல.

5.3 அதனைத் தொடர்ந்து மேல்முறையீட்டாளர் TF.IIIA(1)-ல் மின் இணைப்பு பெற்றுக்கொள்ள ரூ.**50/–** பதிவு கட்டணத்தை மீண்டும் **18.11.2013** அன்று செலுத்தி (tit046AR2S1308/dt. 18.11.13) மற்றும் ரூ. **5420/–IIIA(1)**க்கான மின்இணைப்பு கட்டணத்தை **10.12.2013** அன்று செலுத்தியதன் காரணமாக (MCD – Rs.2500/- CCD – Rs.1800/-; Dev. Charges Rs.600/-; collected vide tit046AR1S438/dt. 10.12.2013; and LT Agt. SC-Rs.20/- collected vide tit046AR1S439/dt. 10.12.2013); IIIA(1) விவசாய மின் இணைப்பு எண்.**046–007–494** நாள் **27.12.2013** அன்று வழங்கப்பட்டுள்ளது.

5.4 Tariff Order dated 20.06.13 மற்றும் **11.12.2014** ல் low Tension Tariff IIIA (1) தலைப்பில் வரிசை எண். (viii) “such LT Tariff IIIA(1) consumer is eligible to apply for LT Tariff IV எனவும், As and when such applicant becomes eligible to get regular supply under LT Tariff IV as per seniority maintained for that purpose by the licensee” எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள காரணத்தினால் கடித எண்.உமிபொ/வி/ பெ.பட்டி/கோ.கட்டு/ அ.எண்.**68/2016** நாள் **9.3.16** மூலமாக சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க இயலாது எனவும் சாதாரன திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க இயலும் என மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டது.அதன்பின்னர், மேல்முறையீட்டாளரின் புகார் மனுவின் அடிப்படையில் மேற்பார்வை பொறியாளர், திருநெல்வேலி அவர்களின் மே.கு. எண்.உ.செ.பொ/மேம்/திலி/உ.பொ./தொநுஉ.**3**/கோ.பு.மனு/ந.எண்**813/16** நாள் **19.03.2016** மனு **24.3.2016** அன்று பெறப்பட்டதன் காரணமாக பதில் அறிக்கை சமர்பிக்க வேண்டி மேல்முறையீட்டாளருக்கு கடித எண்.உமிபொ/வி/ பெ.பட்டி/கோ.கட்டு/ அ.எண்.**087/2016** நாள் **24.3.16** மூலமாக சாதாரண வரிசையில் பதிவு முன்னுரிமை வரும்போது மட்டுமே வீதப்பட்டி எண். IV-க்கான வீதப்பட்டி மாற்றம் வழங்க இயலும் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது சரியானது தான் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5.5 மேல்முறையீட்டாளருக்கு விகிதப்பட்டி ஆணை **20.06.13** மற்றும் **11.12.2014** ன் படி IIIA(1) ல் மின் இணைப்பு பெற்ற பின்பு அந்த மின் இணைப்புக்கு சமகால சாதாரண வரிசை வரும் போது தான் மின் இணைப்பு வீதப்பட்டி IV க்கு மாற்றம் செய்ய இயலும் என்பது விதிகளின் படி சரியானது. எனவே மேல்முறையீட்டாளருக்கு இது குறித்து தெரிவிக்கப்படவில்லை என்ற வாதம் ஏற்புடையதல்ல.

5.6 ஒரு புல எண்ணில் IIIA(1) முறையில் விவசாய உபயோகத்திற்காக ஒரு மின் இணைப்பு உள்ள நிலையில் அதே இடத்திற்கு இலவச விவசாய மின் இணைப்பு (வீதப்பட்டி IV)-ல் மற்றொரு விண்ணப்பம் அளித்தாலோ அல்லது ஏற்கனவே அளிக்கப்பட்டு இருந்தாலோ அவருக்குரிய மின் இணைப்பு இலவச விவசாய மின் இணைப்பாக சாதாரண வரிசையின் முன்னுரிமையின் அடிப்படையில் தான் மாற்றம் செய்ய TNERC ன் விகிதப்பட்டி ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் அவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வீதப்பட்டி IIIA(1)ஐ அவர் தான் செலுத்திய ரூ.**500/–**ஐ செலுத்தியதன் அடிப்படையில் பெற்ற ரூ.**50000/–** திட்டத்தின் கீழ் பதிவு முன்னரிமை வரப்பட்டுள்ளதால் அப்பதிவு மூப்பு முன்னுரிமையின் படி தனக்கு இலவச விவசாய மின் இணைப்பு வீதப் பட்டி IV-க்கு மாற்றம் செய்யக் கேட்டுள்ளார். மேல் முறையீட்டாளரின் மனு TNERC விகிதப்படி ஆணை விதிகளின் படி முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சுய நிதி திட்டம் என்பது ஒருவர் சாதாரண வரிசையின் மின் இணைப்பு பெற இயலாத நிலையில் ஒரு துரித முன்னுரிமையின் படி சுயநிதிதிட்டம் மூலம் ரூ.**50000/–** அல்லது மதிப்பிட்ட தொகை முழுவதும் செலுத்தி பெறும் சிறப்பு விவசாய மின் இணைப்பு திட்டமாகும். எனவே மேல் முறையீட்டாளருக்கு இச்சிறப்பு திட்டத்தின் படி வீதப் பட்டி மாற்றம் வழங்க இயலாது. அப்படி வீதப்பட்டி மாற்றம் செய்தால் உரிமதாருக்கு பெரிய அளவிலான நிதி இழப்பீடு ஏற்படும்.

எனவே சிறப்பு திட்டத்தின் படி வரும் முன்னுரிமையில் வீதப்பட்டி மாற்றம் செற்ற விதிகளில் இடமில்லை.

5.7 மேலும் வீதப்பட்டி ஆணையில் தாழ்வழுத்த மின் கட்டணம் IIIA(1) ன் கீழ் (vii) இந்த மின் கட்டணம், பட்டுப்புழு வளர்ப்பு, மலர் இயல், தோட்டக்கலை, சிப்பிக்காளான் பயிரிடுதல், கால்நடைப்பண்ணை, கோழி வளர்ப்பு மற்றும் பறவை வளர்ப்பு மற்றும் மீன்/இறால் மீன் வளர்ப்பு ஆகிய தொழில்களக்கு பொருந்தக்கூடியதாகும் என்ற வகைப்பாட்டில் வரும் பூந்தோட்டம் என்ற வகைக்காக மனுதாரர் புல எண்.65/1B ல் உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு பெற்றுள்ளார்.

5.8 மேலும் **01.10.2014** SE/RE&I(D)/EE/RE/A1/F.Doc./D.729/14, dt.01.10.2014 கடிதத்தில் "In as much as RSFS scheme has not been discussed in the Tariff Order, the existing procedures in the Tariff Order under LT IIIA(1) shall have to be followed" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் **11.12.14** அன்றைய விகிதப்பட்டியல் ஆணையில் "வேளாண்மை மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளின்" நோக்கத்திற்காக நீர் அணைத்தல் நீர் வழங்கல் ஆகியவற்றிற்கும் பொருந்தக் கூடியதாகும் ஆனால் விண்ணப்பதாரர் தாழ்வழுத்த மின்கட்டணம் IV–ன் கீழ் வேளாண்மைக்கு நீர் வழங்கலுக்கு வகை செய்யும் நோக்கத்திற்காக குறிப்பாக பேணப்பட்டு வரும் முதுநிலைப் பட்டியலின்படி தாழ்வழுத்த மின் கட்டணம் IV–ன் கீழ் மின்வழங்கல் பெற முடியாமலிருக்க வேண்டும். அத்தகைய தாழ்வழுத்த மின் கட்டணம் IIIA(1) உடைய மின் நுகர்வோர் தாழ்வழுத்த மின் கட்டணம் IVற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர். உரிமதாரரால் இந்த நோக்கத்திற்காக பேணப்பட்டுவரும் குறித்த வகை முதுநிலைப்பட்டியலின்படி தாழ்வழுத்த மின் கட்டணம் IVஇன் கீழ் முறையான மின் வழங்கலைப் பெறுவதற்கு அத்தகைய விண்ணப்பதாரர்

தகுதியுடையவராகிற போதெல்லாம் இந்த உட்கூறில் குறிப்பிடப்பட்ட குறித்த வகை நோக்கத்திற்காகப் பெறப்பட்ட மின் வழங்கலின் தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA(1) ஐ தாழ்வழுத்த மின்கட்டணம் IV ஆக மாற்றப்படும். அதன் பின்பு தாழ்வழுத்த மின் கட்டணம் IV க்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள் மட்டுமே பொருந்தும் என உள்ளது.

5.9 மேற்கண்ட அனைத்தும் உரிமதாரரால் TNERC ன் விகிதப்பட்டியின் படி உரிமைதாரரால் வழங்கப்பட்டுள்ள ஆணையில் உள்ள விதி முறைகளை பின்பற்றியே வழங்கப்பட்டுள்ள மன்றத்தீர்ப்பு சரியானதே என்றும் விதிகளின் அடிப்படையில் சாதாரண வரிசையில் சமகால பதிவு முன்னுரிமை வரும்போது மட்டுமே மேல்முறையீட்டாளருக்கு அவரது IIIA(1) விவசாய மின் இணைப்பு எண் வீதப்பட்டி IV ன் கீழ் மாற்றம் செய்ய இயலும் என்ற பதிலுரை தங்களின் மேலான பார்வைக்கு பணிந்து சமர்பித்துக் கொள்ளப்படுகிறது.

6. <u>**மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை :**</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.12.2016 அன்று நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளரும் அவரின் சார்பில் திரு. செந்தில் விஸ்வரூபன், வழக்கறிஞர் அவர்கள் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

6.3 எதிர்மனுதாரரது சார்பில் எதிர்மனுதாரர் 1. திரு முனியசாமி, செயற்பொறியாளர்(பொறுப்பு)/சங்கரன்கோயில் அவர்களும் எதிர்மனுதாரர் 2. திரு தமிழ்செல்வி, உதவி பொறியாளர், பெருமாள்பட்டி அவர்களும் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

7. <u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

7.1 திரு விஸ்வரூபன், வழக்கறிஞர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார். மேலும், அவரின் எழுத்து பூர்வமான வாதுரையிலுள்ள வாதங்களையும் எடுத்துரைத்தார். அந்த எழுத்துபூர்வமான வாதுகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) On enquiry of probable date of getting the agricultural service connection it was said that it might take more than 15 years to get and advised by the department to register an application under SFS scheme for a separate priority and accordingly the petitioner made an application under SFS scheme, the same was registered.

(ii) The petitioner was further informed that allotment of even the agricultural service connection under SFS scheme may be further delayed and advised the petitioner to go for regular service connection under Tariff IIIA(I) considering the urgency and assured that the seniority of agricultural service connection in SFS scheme will in no way hindered by the service connection if effected under Tariff IIIA(1).

(iii) On the assurance given by the department, the petitioner applied for the service connection under Tariff IIIA(I) and was effected on 27.12.2013 with service connection No.07-046-007-497 and hitherto the petitioner has been paying the necessary consumption charges without any default.

(iv) Meanwhile the petitioner reliably learnt that his earlier application for agricultural service connection got allotted under SFS scheme and approached the department for effecting the agricultural service connection under SFS scheme. The petitioner also undertaken to surrender the service connection (connection 07-046-007-497) effected under Tariff IIIA(1)on the eve of effecting the free agricultural service connection under SFS scheme.

(v) It is reiterated that Tariff order dated 11.12.2014 clearly enunciates that "such LT IIIA(I) consumer is eligible to apply for LT Tariff IV as & when such applicant becomes eligible to get regular supply under Tariff IV as per seniority maintained for that purpose by the licensee". Accordingly the petitioner should have been allowed to avail the service connection under Tariff IV on reaching the priorityunder SFS scheme.

(vi) Though the Hon'ble TNERC has categorically stated that the consumer under Tariff IIIAI is eligible for Tariff IV as & when the priority reaches, the communication made by the second respondent ( as not eligible under SFS) is contrary to the spirit of the commission passing such an order and liable to be quashed.

(vii) As for as the agricultural service connections are concerned, all the relevant applications, priority & allotment are being made by the Executive Engineers concerned, the Assistant Engineer /Perumalpetty herein the second respondent has. no authority to issue such a communication and is Ultra Vires. He has acted Suo Motto without any authority delegated for such purpose.

(viii) The CGRF has miserably failed to act independently based on the regulations, codes & tariff orders issued for this purpose instead relied & acted on the clarification orders issued by the licensee which is not at all binding on the CGRF.

(ix) It is pertinent to state that here that the Hon'ble TNERC has not categorically stated that eligibility to apply for IV from IIIA(1) is only for prospective consumers registered under normal scheme.

(x) Schemes are being categorised by the licensee for their convenience and they should not restrict the benefits granted by the commission to suit their

whims & fancies.

(xi) The CGRF stated in their orders that only one service connection is eligible for a particular survey No .65/1B and hence not eligible for free agricultural service connection under SFS is totally contradictory to the undertaking given by the petitioner for surrendering the service connection under Tariff III A(1) on effecting the service connection under Tariff IV.

7.12 If the petitioner is not eligible for service connection under Tariff IV under SFS scheme on effecting the service connection under Tariff IIIA(1) the department ought to have cancelled the same but not done so far.

**8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>**

**8.1** திரு முனியசாமி, செயற்பொறியாளர்(பொறுப்பு)/சங்கரன் கோவில் அவர்கள் மேல்முறையீட்டாளரில் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறத்தினார்.

**8.2** செயற்பொறியார்(பொறுப்பு)/சங்கரன் கோவில் அவர்கள், மேல்முறையீட்டாளர் IIIA(1) என்ற பட்டியலின்படி மின் இணைப்பை பெற்றுள்ளதினால் அவரின் பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணப்பத்தின் சாதரண வரிசையில் அவரின் முன்னுரிமை வரும் பொழுது, அந்த மின் இணைப்பு விவசாய மின் இணைப்பாக மாற்றப்படும் என்று தெரிவித்தார்.

**8.3** விவசாய மின் இணைப்பின் பதிவு என்பது சாதரண வரிசையைத் தான் குறிக்கும் . அதன்பிறகு வேறு திட்டங்களின் கீழ் அரசு அறிவிக்கும் ஆணைபடி மின் இணைப்பு வழங்கப்படுகிறது. சுயநிதி திட்டம் என்பது ஒரு நுகர்வோர் ஒரு குறிப்பிட்ட தொகை அல்லது அவருக்கு மின் இணைப்பு வழங்க ஆகும் மதிப்பீட்டு கட்டணம் ஆகிய இரண்டில் எது அதிகமோ அதை அவர் செலுத்தி பெறும் விவசாய மின் இணைப்பு ஆகும். ஆனால் சுயநிதி திட்டத்தில் பதிவு பெற்ற விண்ணப்பத்திற்கு அதன் முன்னுரிமைப்படி மின் இணைப்பு Tariff IVல் தகுதி பெறும்பொழுது மின் இணைப்பின் Tariff IIIA(1) லிருந்து

Tariff IV ஆக மாற்றப்படும் என்று Tariff Orderல் சொல்லப்படவில்லை என்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்றும் வாதிட்டார். மேலும் சுயநிதி திட்டத்தின் கீழ் (SFS scheme) முன்னுரிமை வரும் பொழுது மேற்கண்ட மின் இணைப்பு விவசாய மின் இணைப்பாக மாற்றப்படும் என்று தகவல் எதுவும் மேல்முறையீட்டாளருக்கு அதிகாரிகளால் தெரிவிக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

**9.** <u>**எதிர்மனுதாரரின் எழுத்து பூர்வமான வாதுகை:**</u>

**9.1** எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் எழுத்து பூர்வமான வாதுரைக்கு பதிலுரையை **27.12.2016** நாளிட்ட மனு மூலம் சமர்ப்பித்துள்ளார். அதிலுள்ள வாதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**9.2** சங்கரன்கோவில் ஊரக உபகோட்டத்திற்குட்பட்ட பெருமாள்பட்டி விநியோகப் பிரிவிற்குட்பட்ட எட்டிச்சேரி கிராமத்தில் பருவக்குடி Rev. village புல எண்.**65/1B** விவசாய நிலத்திற்கு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் திரு.அ.வெள்ளைச்சாமி, த/பெ.அய்யனார், க.எண்.**3/9**T1 முத்தமிழ் அபார்ட்மெண்ட, மகாராஜா நகர், திருநெல்வேலி அவர்களால் ரூ.**50/–**யை **30.01.2013**ல் செலுத்தப்பட்டு (046AR2S1175/30.1.13) செயற்பொறியாளர் விநியோகம், சங்கரன்கோவில் அலுவலகத்தில் வரிசை எண்.**113/2012–2013**ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு மேல்முறையீட்டாளர் திரு.அ.வெள்ளைச்சாமி சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு பெற ரூ. **500/–** யை **28.03.2013** அன்று செலுத்தி (tit046AR2S1153/28.03.2013) துரித வரிசை முன்னுரிமையில் பதிவு செய்துள்ளார்.

**9.3** அதனைத் தொடர்ந்து மேல்முறையீட்டாளர் IIIA(1) ல் மின்இணைப்பு பெற்றுக்கொள்ள ரூ.**50/–** யை **18.11.2013** அன்று செலுத்தியும் (tit046AR2S1308/18.11.2013); மற்றும் ரூ.**5420/–** யை **10.12.2013** அன்று செலுத்தியதன் காரணமாக (MCD – Rs.2500/- CCD – Rs.1800/-; Dev. Charges Rs.600/-; collected vide tit046AR1S438/dt. 10.12.2013;

and LT agreement charges SC-Rs.20/- collected vide tit046AR1S439/dt. 10.12.2013) மின் இணைப்பு எண்.**046–007–494** நாள் **27.12.2013** அன்று வழங்கப்பட்டது.

**9.4** மேலும் சுயநிதி திட்டத்தின் (SFS) திட்டத்தில் மின் இணைப்பு வழங்கலில் தாமதம் ஏற்படுவதால் தற்போது பூந்தோட்ட மின் இணைப்பு பெற்றுகொண்டு SFS திட்டம் ஆண்டு குறியீடு வரும் போது உரிமைதாரரால் SFS திட்டத்தில் விவசாய மின் இணைப்பு வழங்கப்படும் என மேல்முறையீட்டாளர் கூறியிருப்பது போல் உரிமைதாரரால் வாய்மொழியாகவோ அல்லது கடித வாயிலாக உத்தரவாதம் எதுவும் அளிக்கப்படவில்லை என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**9.5** Tariff Order dated 20.06.2013, Tariff Order dated 11.12.2014, பக்கம் **13**, வரிசை எண். (viii) “such LT Tariff IIIA(1) consumer is eligible to apply for LT Tariff IV எனவும் As and when such applicant becomes eligible to get regular supply under LT Tariff IV as per seniority maintained for that purpose by the licensee” எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள காரணத்தினால் இவ்வலுவலக கடித எண். உமிபொ/வி/பெ.பட்டி/கோ.கட்டு/அ.எண்.**68/2016** நாள் **9.3.16** மூலமாக சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின் இணைப்பு வழங்க இயலாது எனவும் சாதாரண வரிசை முன்னுரிமை வரும்போது விவசாய மின் இணைப்பு வழங்கப்படும் என மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர், மேல்முறையீட்டாளரின் புகார் மனுவின் அடிப்படையில் மேற்பார்வை பொறியாளர், திருநெல்வேலி அவர்களின் மே.கு.எண். உ.செ.பொ/மேல்/திலி/உ.பொ./தொநுஉ.**3**/கோ.பு.மனு/ ந.எண்.**813/16**, நாள் **19.03.2016.** இவ்வலுவலகத்தில் **24.3.2016** அன்று பெறப்பட்டதன் காரணமாக பதில் அறிக்கை சமர்பிக்க வேண்டி மேல்முறையீட்டாளருக்கு இவ்வலுவலக கடித எண். உமிபொ/வி/பெ.பட்டி/ கோ.கட்டு/அ.எண்.**087/2016** நாள் **24.3.16** மூலமாக சாதாரண வரிசையில் பதிவு

முன்னுரிமை வரும்போது மட்டுமே மின் இணைப்பு வழங்க இயலும் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது.

9.6 நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனு எண்12/2016–17 தீர்ப்புரையில் ஒரு புல எண்ணில் ஒரு மின் இணைப்பு மட்டுமே ஒரு செயல் நோக்கத்திற்காக வழங்க இயலும் என்றும் மேற்கண்ட விதிகளின் படி மனுதாரருக்கு விவசாயம் செய்வதற்காக ஏற்கனவே ஒரு IIIA(1) திட்டத்தின் கீழ் ஒரு மின் இணைப்பு உள்ள நிலையில் மேலும் விவசாயத்திற்கு சுயநிதி திட்டப்பதிவின்படி ஆராய்கையில் மனுதாரரின் LT Tariff IV கீழ் ஆன பதிவு மூப்பு வரும் போது மனுதாரருக்கு அவரது மின் இணைப்பு எண் வீதப்பட்டி IV கீழ் மாற்றம் செய்ய இயலும் என்றும் சுயநிதி திட்டம் ரூ. 50,000/– கீழ் விவசாய மின் இணைப்பு வழங்க இயலாது எனவும் தீர்வு செய்யப்பட்டுள்ளது.

9.7 விதிகளின் அடிப்படையில் சாதாரண வரிசையில் சமகால பதிவு முன்னுரிமை வரும்போது மட்டுமே மேல் முறையீட்டாளருக்கு அவரது IIIA(1) விவசாய மின் இணைப்பு எண் வீதப்பட்டி IV ன் கீழ் மாற்றம் செய்ய இயலும் என்ற பதிலுரை தங்களின் மேலான பார்வைக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

## 10. <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

10.1 இருதரப்பு வாதங்களையும் கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும் பொழுது இந்த வழக்கின் வழக்கெழு வினாவாக தெரிவது. மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான அவரின் IIIA(1) என்ற பட்டியலில் பெறப்பட்டுள்ள மின் இணைப்பு எண். 046–007–497 ஐ அவரின் சுயநிதி திட்டத்தின் (SFS) முன்னுரிமையின் படி விவசாய மின் இணைப்பாக மாற்ற வேண்டும் என்பது ஏற்புடையது தானா ? என்பது ஆகும்.

10.2 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் Tariff order SMT No.9 of 2014ன் பத்தி 6.17ஐ குறிப்பிட்டு வாதிடுவதால் Tariff Order - SMT 9 of 2014 சம்பந்தப்பட்ட பத்தி 6.17 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ 6.17 Low Tension Tariff III-A (1):*

| *Tariff* | *Consumption slabs – Range in kWh and billing period* | *Commission Determined Tariff* | |
|---|---|---|---|
| | | *Fixed charges(Rupees per Kw/per month)* | *Energy charges in paise per kwh* |
| *Low Tension Tariff III-A(1)* | *0 to 250 units per month or 0 to 500 units bimonthly* | *20* | *400* |
| | *From 251 units and above units per month or 501 units and above bimonthly* | | *460* |

*i. The connected load for supply under this tariff category shall not exceed 10HP.*
*ii. This tariff is applicable to Cottage and tiny industries, Micro enterprises engaged in the manufacture or production of goods pertaining to any industries specified in the first schedule to Industries (Development and Regulations) Act 1951 (Central Act 65 of 1951).*

*iii. The intending consumers applying for service connection under LT Tariff III A (1) claiming to have established the micro enterprise engaged in the manufacture or production of goods shall produce the cottage industries certificates from the industrial department /acknowledgement issued by the District Industries Centre under the Micro Small and Medium Enterprises Development Act, 2006 (Act 27 of 2006 ) as proof for having filed Entrepreneurs Memorandum for setting up of Micro Enterprises for manufacture or production of goods with District Industries Centre underwhose jurisdiction the Enterprise is located.*
*iv. The existing consumers who are classified under LT Tariff III A (1) based on the SSI / Tiny Industries Certificate may be continued to be charged under the same tariff*
*v. This tariff is applicable to Small Gem cutting units, Waste land development, laundry works and Common effluent treatment plants.*
*vi. This tariff is also applicable to Coffee grinding, Ice factory, Vehicle Body building units, saw mills, rice mills, flour Mills, battery charging units and Dairy units.*
*vii. This tariff is also applicable for sericulture, floriculture, horticulture,mushroom cultivation, cattle farming, poultry & bird farming and fish/prawn culture.*
*viii. This tariff is also applicable for pumping of water/supply of water for the purpose of “agriculture and allied activities” as specified in LT Tariff IV provided that the applicant is unable to get supply under LT tariff IV as per the seniority maintained specifically for the purpose of providing supply to Agriculture under LT tariff IV. Such LT Tariff III-A(1) consumer is eligible to apply for LT Tariff IV. As and when such applicant becomes eligible to get regular supply under LT Tariff IV as per the specific seniority maintained for that purpose by the licensee, the supply obtained under LT Tariff III-A(1) for the specific purpose*

*mentioned in this sub clause shall be converted into LT tariff IV. Thereafter, the terms and conditions of LT Tariff IV only will apply."*

**10.3** மேற்கண்ட பத்தி **6.17**ன் (viii) ஐ கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது மின் கட்டணம் IIIA(1) தாழ்வழுத்த மின் கட்டண பட்டியல் IV இல் குறிப்பிட்டப்பட்டுள்ள வேளாண்மை மற்றும் அது தொடர்பான வேலைகள் தொடர்பாக நீர் வழங்கல்/நீர் இரைத்தல் ஆகியவற்றிற்கும் பொருந்த கூடியதாகும். ஆனால் விண்ணப்பதாரர், மின்கட்டணம் பட்டியல் IV இன் கீழ் வேளாண்மைக்கு இணைப்பு வழங்க பேணப்பட்டு வரும் குறிப்பிட்ட முதுநிலைப் பட்டியலின் வரிசைப்படி மின் இணைப்பை பெற முடியாத நிலை இருக்க வேண்டும். அவ்வாறு உள்ள IIIA(1) மின் கட்டண பட்டியல் நுகர்வோர்கள் தாழ்வழுத்த மின்கட்டண பட்டியல் IV க்கு விண்ணப்ப தகுதி படைத்தவர்கள் ஆவர். மேலும் அத்தகைய விண்ணப்பதாரர்கள், உரிமம்தாரரால் தாழ்வழுத்த வேளாண்மை (மின் கட்டணபட்டியல் IV ல்) மின் இணைப்பு பெறுவதற்காக குறிப்பாக பேணப்படும் பதிவு வரிசையின் படி எப்பொழுது மின் இணைப்பு பெறுவதற்கு தகுதி பெறுகின்றாரோ, அப்பொழுது தாழ்வழுத்த மின்கட்டணம் IIIA(1) ல் பெற்ற மின் இணைப்பு தாழ்வழுத்த மின் கட்டணம் IV என்ற பட்டியலுக்கு மாற்றப்படும். அதன் பிறகு மேற்கண்ட மின் இணைப்பிற்கு தாழ்வழுத்த மின் கட்டண பட்டியல் IV ன் வரையறைகள் தான் பொருந்தும்.

**10.4** இங்கு உரிமம்தாரரால் வேளாண்மைக்கு என்று பேணப்பட்டு வரும் specific seniority என்பது தான் மிகவும் முக்கியமான வார்த்தையாகும்.

**10.5** மேல்முறையீட்டாளர் உரிமம்தாரர் வேளாண்மை மின் இணைப்பு வழங்குவதற்கு பதிவு செய்துள்ள சுயநிதி திட்டம் ரூ.**50000**/–, (SFS – **50000**, scheme) ன் படி அவரின் முன்னுரிமை தற்பொழுது வருவதால் அந்த முன்னுரிமையின் படி அவரின் மின் இணைப்பை மின் கட்டண பட்டியல் IV என்று மாற்றி அமைக்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

10.6 எதிர்மனுதாரர் மேற்கண்ட Tariff Order படி வேளாண்மை விண்ணப்பத்தின் சாதாரண (Normal) வரிசைப்படி மேல்முறையீட்டாளரின் முன்னுரிமை வரும் பொழுது தான் மாற்ற முடியும், தற்பொழுது மாற்ற முடியாது என்றும் வாதிட்டுள்ளார். மேலும் இது சம்பந்தமாக தலைமை பொறியாளர் / கோயம்புத்தூர் அவர்களின் 28.11.2015 ஐ சுட்டிக்காட்டி அதன்படி, Normal priority வரும் பொழுதுதான் மின் இணைப்பை IIIA(1) லிருந்து IV ஆக மாற்ற முடியும் என்று வாதிட்டுள்ளார்.

10.7 வேளாண்மை மின் இணைப்பை பொருத்த வரையில், மின் பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(2) கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

***27. Requisitions for Supply of Energy:***

*xxxx xxxx xxxxxx*

*(2) Supply to Agricultural category: Application for supply to agriculture category shall be in Form 2 of Annexure III. In respect of the agricultural category, this provision shall be governed by the directives issued by the Commission from time to time, on the basis of the guidance on this matter by the National Electricity Policy (as stipulated in sub section 4 under section 86 of the Act) and the policy directions in public interest given by the State Government under sub section (1) of section 108 of the Act.*

*xxxxx xxxx xxxx*

10.8 மேற்கண்ட விதியின்படி, வேளாண்மை வகையின் மின் வழங்குதலுக்கு அந்த பொருள் தொடர்பாக தேசிய மின்சார கொள்கை வழிகாட்டுதலையும் மாநில அரசு பொது நலன் கருதி வெளியிடும் கொள்கை நெறி காட்டுதலையும் அடிப்படையாக கொள்ள வேண்டும் என்று அறிய முடிகிறது.

10.9 வேளாண்மை மின் இணைப்புகள் வழங்க வருடந்தோரும் குறியீடுகளை தமிழ்நாடு அரசுதான் வழங்குகிறது. அக்குறியீட்டில் Normal, SFS, Jeevandhara etc போன்ற வெவ்வேறு இனங்களுக்கு தனி தனியாக குறியீடு வழங்கப்படுகிறது.

**10.10** இந்த வழக்கில் வேளாண்மை மின்இணைப்பு வழங்குவதற்காக குறிப்பாக பேணப்படும் முதுநிலை பட்டியல் (specific seniority maintained for that purpose by the licensee) என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, வேளாண்மை மின் இணைப்புகள் வழங்க உரிமதாரர் எவ்வாறு விண்ணப்பங்களை பதிவு செய்து முதுநிலையை பேணுகின்றனர் என்பதை ஆராய வேண்டும்.

**10.11** வேளாண்மை விண்ணப்பங்கள், ஆணையம் வகுத்துள்ள படிவம் 2ன் படி இருக்க வேண்டும். அவ்வாறு சரியாக உள்ள விண்ணப்பங்கள் ரூ.50/– பதிவு கட்டணமாக பெறப்பட்டு, செயற்பொறியாளர் அலுவலகத்தில் வரிசையாக பதிவு செய்யப்படுகின்றது. அந்த பதிவு எண் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட பதிவுதான் சாதாரண வரிசை பதிவு (Normal). மேற்கண்ட பதிவு மூப்பின் அடிப்படையில் பெறும் மின் இணைப்புகளுக்கு ஆகும் மதிப்பீட்டு செலவு தொகையை வாரியம் ஏற்றுக் கொள்ளும்.

**10.12** சுயநிதி திட்டம் என்பதில் விவசாய மின் இணைப்புகள் வழங்குவதற்கு ஆகும் செலவை, விண்ணப்பதாரர்கள் ஏற்றுக் கொள்வதாக இருந்தால், அவர்களுக்கு என்று தனியாக ஒரு முன்னுரிமை ஏற்படுத்தப்பட்டு அந்த திட்டத்தின் கீழ் உள்ள முன்னுரிமைப்படி குறியீடுகளுக்கு தகுந்தவாறு மின் இணைப்பு வழங்கப்படும். ரூ.25,000/– திட்டம் மற்றும் 50,000/– திட்டம் என்று வெவ்வேறு திட்டம் உள்ளது . எந்த திட்டத்தில் ரூ.500/– செலுத்தி பதிவு செய்கின்றார்களோ அந்த திட்டத்தின் கீழ் உள்ள முன்னுரிமை வரிசைப்படி குறியீடுகளுக்கு தகுந்தார்போல் மின் இணைப்பு வழங்கப்படும். விண்ணப்பதாரர் அவரின் முன்னுரிமை வரும் பொழுது மதிப்பீட்டு தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்த தவறினால் சுயநிதி திட்டத்தின் கீழ் முன்னுரிமையை இழந்து விடுவார். ஆனால் சாதாரண வரிசையில் (Normal category) ல் அவரின் விண்ணப்ப பதிவு இருக்கும். அந்த முன்னுரிமையில் வாரிய செலவில் மின்பாதை அமைக்கப்பட்டு மின் இணைப்பை பெற்றுக் கொள்ளலாம்.

**10.13** மேற்கண்ட பத்திகளில் உள்ள தகவல்களின்படி, **ரூ.50/–** செலுத்தி விவசாய விண்ணப்பத்தை பதிவு செய்வது ஒரு பதிவு ஆகும். அதை சாதாரண வரிசை (Normal) என்று கூறப்படுகிறது. விவசாய மின் இணைப்பு கோரும் எல்லா விண்ணப்பங்களும் கண்டிப்பாக மேற்கண்ட முறையில் பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும். எனவே அதுதான் Primary registration ஆகும். மேற்கண்ட விண்ணப்ப பதிவுக்கு பின் சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க ஆகும் மதிப்பீட்டு தொகையை செலுத்தி மின் இணைப்பு பெற விருப்பம் உள்ள விண்ணப்பதாரர்கள் அதில் எந்த திட்டத்தில் சேர விரும்புகின்றனரோ அந்த திட்டத்திற்காக மறுபடியும் **ரூ.500/–** செலுத்தி தங்களின் விண்ணப்பத்தை சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும். இதில் பதிவு செய்த பின்பு மதிப்பீட்டு தொகை செலுத்த முடியாத நிலையில் அந்த சுயநிதி திட்டத்தின் கீழ்செய்யப்பட்ட பதிவு தள்ளுபடி செய்யப்படும். ஆனால், அந்த விண்ணப்பத்தின் **ரூ.50/–** செலுத்தி normal என்று பதிவு செய்த முன்னுரிமை தள்ளுபடி ஆகாது. எனவே, சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு என்பது ஒரு விருப்பப் பதிவு ஆகும். இது அனைத்து விவசாய விண்ணப்பத்திற்கும் கட்டாயம் அல்ல. இது ஒரு விருப்ப பதிவு ஆகும். எனவே, **ரூ.50/–** செலுத்தி அனைத்து விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்களும் பதிவு செய்யும் பதிவு தான் வேளாண்மை மின்இணைப்பு பெறுவதற்கான பொதுவான முன்னுரிமையை குறிக்கும் என்று தெரிகிறது.

**10.14** மேலும் ஒரு மின் இணைப்பை IIIA(1) என்ற கட்டண பட்டியலின் படி பெறும் பொழுது மின் இணைப்பிற்கு தேவையான மின்பாதை நீட்டிப்பு பணி உரிமம்தாரர் செலவில் செய்யப்பட்டுவிடும். ஆனால் சுயநிதி திட்டத்தின் முன்னுரிமைப்படி என்றால் மின்பாதை நீட்டிப்பு பணிக்கான மதிப்பீட்டு தொகை அல்லது திட்டத்தின் தொகை இவைகளில் எது அதிகமோ அந்த தொகை விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டும். ஆனால் இங்கு ஏற்கனவே மின்பாதை வாரியச்

செலவில் அமைக்கப்பட்டு மின் இணைப்பும் வழங்கப்பட்டுவிட்டது என்பதால் மறுபடியும் மின்பாதை அமைக்க மதிப்பீட்டு தயாரிக்க வேண்டிய நிலை இல்லை.

**10.15** IIIA(1) என்ற கட்டணத்தில் பெற்ற மின் இணைப்பை சாதாரண வரிசை (Normal) என்ற வகை முன்னுரிமையின் படி விவசாய மின் இணைப்பை மாற்றும் பொழுது மேற்கண்ட மின்பாதைக்கான மதிப்பீடு செய்யும் நிலைவராது. ஏனெனில் சாதாரண வரிசை (Normal வகையிலும் மின்பாதைக்கு ஆகும் செலவை வாரியம் ஏற்றுக்கொள்ளும். எனவே, மேற்கண்ட நிலையில் வெறும் பட்டியல் (tariff) மாற்றம் மட்டும்தான் செய்யவேண்யது இருக்கும். Tariff orderன் படியும் பட்டியல் (Tariff) மாற்றம் செய்யப்படும் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

**10.16** மேற்கண்ட பத்தி **10.13, 10.14** மற்றும் **10.15**ல் தெரிவித்துள்ள காரணங்களால் Tariff Order ல் கூறியுள்ள வேளாண்மை வகை மின்இணைப்பு பெறுவதற்காக குறிப்பாக பேணப்படும் முதுநிலைப்பட்டியலின்படி (specific seniority maintained for that purpose) என்பது சாதாரண (Normal) என்ற வகையில் ரூ.50/– செலுத்தி பதிவு செய்யப்படும் விவசாய விண்ணப்பங்களைத் தான் குறிப்பிடப்படுகின்றது என்று தீர்வு செய்யப்படுகிறது. எனவே, IIIA(1) என்ற பட்டியலில் பெறப்பட்ட மின்இணைப்பை விவசாய மின் இணைப்பு IV என்ற பட்டியலுக்கு மாற்ற வேண்டும் எனில் அந்த தாழ்வழுத்த விவசாய மின்இணைப்பு விண்ணப்பத்தின் பதிவு சாதாரண வரிசையின் முன்னுரிமையில் விவசாயம் மின்இணைப்பு பெற தகுதி பெறும் பொழுதுதான் மாற்ற முடியும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.17** மேலே **10.16** பத்தியிலுள்ள தீர்வின்படி III-A(1) என்ற மின்கட்டண பட்டியலில் உள்ள மின் இணைப்பை விவசாய மின் இணைப்பிற்கான மின் கட்டணபட்டியல் IV என்பதற்கு மாற்ற வேண்டும் எனில், விண்ணப்பதாரரின் விவசாய விண்ணப்பத்திற்கு சாதாரண வரிசையில் (Normal priority) முன்னுரிமை வரும்பொழுதுதான் மாற்ற வேண்டும் என்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.** **<u>முடிவுரை:</u>**

**11.1** என்னுடைய பத்தி **10**ல் உள்ள தீர்வின்படி, திருநெல்வேலி மின்பகிர்மான வட்டத்தின் தீர்வில் மாற்றம் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.2** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண். 78 of 2016 முடித்து வைக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
**1)** திரு. அ. வெள்ளைச்சாமி,
த/பெ அய்யனார்,
க.எண்.3/9T1,
முத்தமிழ் அபார்ட்மெண்ட்,
மகாராஜா நகர்,
திருநெல்வேலி

**2)** செயற் பொறியாளர் /பகிர்மானம்,
சங்கரன்கோயில்,
திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சங்கரன்கோயில்–**627 756.**

**3)** உதவி பொறியாளர்/பகிர்மானம்,
பெருமாள்பட்டி,
திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பெருமாள்பட்டி – **627 753.**

**4)** தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்)
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மகாராஜா நகர், திருநெல்வேலி

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.